# பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

## இல்ல விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பாராட்டு!

**தஞ்சை, மார்ச் 6–**

**தஞ்சையில், நேற்று காலை, முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள், கழக மூத்த முன்னோடி அன்பிலார் அவர்கள் இல்லத் திருமணத்தைத் தலைமை ஏற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில், "ஒரு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!" என்று பாராட்டினார்.**

முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (05.03.2026) தஞ்சாவூரில் நடைபெற்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இல்லத் திருமண நிகழ்வில் பங்கேற்று ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புக்குரிய அன்பில் அவர்களுடைய இல்லத்தில், அன்பில் பொய்யாமொழி – திருமதி மாலதி ஆகியோரின் பேத்தியும், சுரேஷ் திருமதி எழிலரசி (எ) சுகி ஆகியோரின் மகளுமான ஓவியாவிற்கும் வரதையா – திருமதி சுலோச்சனா ஆகியோரின் பேரனும், ஹேமச்சந்தர் – திருமதி மோகனா ஆகியோரின் மகனுமான மனோஜிற்கும் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று, அதே நேரத்தில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களுக்கு மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

நமது குடும்பம் எனும் நிலையில் நடைபெறும் மணவிழா! வரவேற்புரை ஆற்றியிருக்கும் தம்பி உதயநிதி குறிப்பிட்டதைப் போன்று, இது எங்கள் குடும்பம் என்று சொல்வதா! கழகக் குடும்பம் என்று சொல்வதா! ஒட்டுமொத்தமாகச் சொன்னால், நமது குடும்பம் என்ற நிலையில்தான், இந்த மணவிழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்பில் அவர்களுடைய கழகப் பணியை இந்த மாவட்டத்தில் இருக்கும் உங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தலைவர் கலைஞரிடத்தில் எந்த அளவிற்கு அவர் நட்பு கொண்டிருந்தார்; தலைவர் கலைஞருக்கு எந்த அளவிற்குத் துணையாக இருந்தார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கழகத்தை உருவாக்குவதற்கு; கழகம் இன்றைக்கு கம்பீரமாக ஓங்கி நிற்பதற்குக் காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்த அன்பில் அவர்கள், இறுதி வரையில், கழகத்திற்கு தலைவர் கலைஞருக்குப் பக்கபலமாக இருந்தவர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.3.2026) தஞ்சாவூரில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் அன்பிலார் அவர்களின் கொள்ளுப் பேத்தியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்களின் பேத்தியும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் சகோதரி திருமதி சுகி (எ) எழிலரசி – சுரேஷ் தம்பதியரின் மகளுமான பி.எஸ். ஓவியா மற்றும் எச். மனோஜ் ஆகியோரது திருமணத்தைத் தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், திருமதி துர்கா ஸ்டாலின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பழனிவேல் உள்ளிட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் திருமதி கிருத்திகா உதயநிதி, வே.சபரீசன், திருமதி ச.செந்தாமரை, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து, அவருடைய திருமகன் – என்னுடைய ஆருயிர் நண்பன் அன்பில் பொய்யாமொழி அவர்கள், அவர் எனக்கு எந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தார் என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே, ஒரு உற்ற நண்பனாக மட்டுமல்ல; என்னுடைய வாழ்வில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்தவர் நம்முடைய அன்பில் பொய்யாமொழி அவர்கள். அப்படி தொடர்ந்தது அந்த உறவு.

**"நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்பில் அவர்களுடைய கழகப் பணியை இந்த மாவட்டத்தில் இருக்கும் உங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தலைவர் கலைஞரிடத்தில் எந்த அளவிற்கு அவர் நட்பு கொண்டிருந்தார்; தலைவர் கலைஞருக்கு எந்த அளவிற்குத் துணையாக இருந்தார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கழகத்தை உருவாக்குவதற்கு; கழகம் இன்றைக்கு கம்பீரமாக ஓங்கி நிற்பதற்குக் காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்த அன்பில் அவர்கள், இறுதி வரையில், கழகத்திற்கு - தலைவர் கலைஞருக்குப் பக்கபலமாக இருந்தவர்."**

### எடுத்துக்காட்டு அன்பில் மகேஸ் பொய்யாமொழி

அதற்குப் பின்னால், இங்கே வரவேற்புரை ஆற்றிய தம்பி உதயநிதி குறிப்பிட்டதைப் போன்று, இன்றைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கும் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், இன்றைக்கு எங்களுடைய குடும்பத்தில் – குறிப்பாக, உதயநிதியிடத்தில் எவ்வளவு நட்பாகப் பழகி, அவர் இன்றைக்கு வளர்ந்து, சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, பள்ளிக் கல்வித்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்று, ஒரு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவர்தான், நம்முடைய அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்.

சட்டமன்றத்தில் உரையாற்றினாலும் சரி; பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினாலும் சரி, எந்தப் புள்ளி விவரமும் கையில் வைத்துக் கொள்ளாமல், எதையும் படபடவென்று கம்ப்யூட்டரைப் போன்று பேசும் ஆற்றலைப் பெற்றவர், நம்முடைய அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள். அவரைப் பார்த்து அனைவரும் பாராட்டுகிறபோது, அவருடைய தந்தை – என்னுடைய அருமை நண்பர் பொய்யாமொழி எந்த அளவிற்கு சந்தோஷப்படுவாரோ, அதைவிட அதிகமாக நான் சந்தோஷப்பட்டிருக்கிறேன். இப்போதும் சந்தோஷப்பட்டு கொண்டிருக்கிறேன்.

### வெற்றிகரமாக நிறைவுற்ற கூட்டணி ஒப்பந்தம் மகிழ்ச்சி அளிக்கிறது!

இந்த மணவிழா நிகழ்ச்சி எந்தச் சூழ்நிலையில் நடந்திருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நேற்று இரவு வரை, கூட்டணிக் கட்சியோடு பேசி, ஒரு ஒப்பந்தத்தை முடித்து விட்டுத்தான், அதுவும் வெற்றிகரமாக முடித்து விட்டுத்தான், அனைவரும் பாராட்டும் வகையில் முடித்து விட்டுத்தான், இன்றைக்கு நீங்கள் எல்லாம் வாட்ஸ்அப்பில், சோசியல் மீடியாவில் பார்த்திருக்கலாம். அந்த ஒப்பந்தத்தை முடித்துவிட்டு, காரில் ஏறுகிறபோது, கையை எடுத்து, "ஓவர்" என்ற அந்த ஆக்சனோடு காரில் ஏறிய காட்சியைப் பார்த்திருப்பீர்கள். அது நான் திட்டமிட்டு செய்ததல்ல. காரில் ஏற வருகிறபோது, அங்கே எதிரில் நின்று கொண்டிருந்த பத்திரிகை நண்பர்கள் எல்லாம் என்னைப் பார்த்து, "முடிந்துவிட்டதா? முடிந்துவிட்டதா?" என்று கேட்டார்கள். "முடிந்துவிட்டது" என்று சொன்னேன், அவ்வளவுதான். அது இன்றைக்கு பெரிய வைரலாகி, 'அனைத்தும் முடிந்துவிட்டது ஆல் ஃபினிஷ்' என்று போட்ட மாதிரி, இன்றைக்கு அந்தக் காட்சிகள் எல்லாம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே அந்த மகிழ்ச்சியோடுதான் வந்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தத் திருமணத்தை முடித்துவிட்டு, மாநிலங்களவை வேட்பாளராக நாம் இருவரை நாம் அறிவித்திருக்கிறோம். கூட்டணிக் கட்சிகளுக்கு இரண்டு இடங்களைக் கொடுத்திருக்கிறோம். அந்த நான்கு பேரும் சரியாக 12.00 மணியளவில் சென்னையில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய இருக்கிறார்கள். இன்றுதான் கடைசி நாள். "நான் வந்தே தீர வேண்டும்" என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். நான் வழக்கமாகச் செல்வதுண்டு. எனவே, இதை முடித்துவிட்டு உடனடியாகச் செல்ல வேண்டிய சூழல் இருக்கிற காரணத்தினால்தான், வேகவேகமாக வந்து, வேகவேகமாகத் திருமணத்தை முடித்து வைத்துவிட்டு, நான் செல்ல இருக்கிறேன்.

### பொய்யாமொழி அடையும் மகிழ்ச்சியை விட கூடுதல் மகிழ்ச்சி எனக்கு!

இன்றைக்கு அந்த இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்ற நேரத்தில், உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். பொய்யாமொழி இருந்து இந்த விழாவை நடத்துகிறபோது, எந்த அளவிற்கு மகிழ்ச்சி அடைவாரோ, அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியை நான் அடைந்து கொண்டிருக்கிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் பல்லாண்டு காலம் எல்லா நன்மையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், "வீட்டிற்கு விளக்குகளாய் ... நாட்டிற்குத் தொண்டர்களாய்..." இருந்து வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலிருந்து தீரர் கோட்டமாம்

# திருச்சி மாநாட்டில் 500 வாகனங்களில் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்போம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், மார்ச்,6,

தீரர் கோட்டமாம் திருச்சியில் நடைபெறும் கழக மாபெரும் தி.மு.க. மாநாட்டில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலுந்து 500 வாகனங்களில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்போம் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



திராவிட முன்னேற்றக் கழகம் கொட்டும் மழையில் 1949 ஆம் ஆண்டு இராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா தலைமையில் தொடங்கப்பட்டது. நமது இயக்கம், மக்களோடு கலந்து மக்களுக்கு தொண்டாற்றி தமிழ்நாட்டை, தமிழர்களை முன்னேற்றுகிற ஒரே இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கி வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

### திருச்சி திருப்புமுனை மாநாடு

1956 ஆம் ஆண்டு, இதே திருச்சியில் கழகத்தின் மாநாட்டை நடத்தி, அம் நாட்டில் தான் கழகம் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா? என்று கழகத் தோழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தினார் அறிஞர் அண்ணா. உறுப்பினர்களிடம் தேர்தலில் போட்டியிடலாமா? என்று வாக்கெடுப்பு நடத்தி கருத்து கேட்ட ஒரே இயக்கம் உலகத்திலேயே நமது திராவிட முன்னேற்றக் கழம் மட்டும் தான் என்று சொல்வதில் நாம் பெருமை கொள்வோம். அன்று நடைபெற்ற மாநாடு ஒரு திருப்புமுனைமாநாடாக அமைந்தது. ஆம், தி.மு.கழகம் தேர்தலில போட்டியிடலாம் என்று கழகத்தினர் வாக்களித்தனர். அதன் அடிப்படையில் பல்வேறு தேர்தல்களை சந்தித்து ஆறுமுறை தமிழ்நாட்டில் ஆட்சி அமைத்து பல சரித்திர, வரலாற்றி திட்டங்களை தீட்டி இன்றைக்கு இந்தியாவே தமிழ்நாட்டை திரும்பி பார்க்கும் அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக, முதல் மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

அதே திருச்சியில் தான் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அன்பில் அழைக்கிறார் என்று பல முறை அழைத்து, நாம் பல மாநாடுகளை கண்டிருக்கிறோம். ஏன் திருச்சியிலே திருப்புமுனை மாநாட்டினை நடத்திய பெருமை நமது கழக முதன்மைச் செயலாளர் கே. என்.நேரு அவர்களுக்கும் உண்டு.

### வெற்றி விழா கண்ட திருச்சி மாநாடுகள்

ஒவ்வொரு தேர்தலின் போதும் நாம் திருச்சியில் மாபெரும் மாநாட்டினை நடத்தி வெற்றி விழா கொண்டாடுவோம். அதே னோன்று தான் இதோ இந்த 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் கழகத்தின் வெறிக்கு கட்டியம் கூறப் போகும் மாநாடு தான் திருச்சி மாநாடு ஆகும்.

கழகம் 7வது முறை ஆட்சி அமைத்திடவும். நம் திராவிட இயக்கப் பெருந் தலைவர் தமிழர்களின் இதயத்தில் குடி கொண்டிருக்கும் ஒரே தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். யாரும் செய்யாத அரிய சாதனைகளை படைத்து வருகிறார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிர்க்கு ரூபாய் 5000 வழங்கி மகளிர்க்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

இதோ நேற்று முன் தினம் விளிம்புநிலை மக்கள் 40 இலட்சம் பேருக்கும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கி அவர்களின் வாழ்க்கையிலும் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

இன்று எதிர்க்கட்சியினர் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுவிடும் என்று அவர்களே சொல்லிக் கொண்டிருக்கும் வகையில் இன்றைக்கு 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தினை அமைத்து விட்டார் நமது தலைவர் அவர்கள்.

கழகம் 7 வது முறையாக அட்சி அமைத்திடவும், நம் திராவிட இனத் தலைவர் எட்டு கோடி தமிழர்களின் நெஞ்சங்களில் அமர்ந்திருக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பழைப்பினை ஏற்று கழகத் தலைவரை இரண்டாவது முறையில் அரியணை ஏறிட திருச்சி மாநாட்டில் 10 இலட்சம்பேர் திரண்டு கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் உறுதி பூண்டிடும் வகையில் மிகப் பிரமாண்ட மாநாடு வருகிற 9 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று நடைபெற இருக்கிறது.

### 500 வாகனங்களில் புறப்படுவோம்!

இம் மாபெரும் மாநாட்டில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீரர் கோட்டமாம் திருச்சியில் 9 அம் தேதி காலையிலேயே வாகனங்களில் புறப்பட தயாராவோம். நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலிருந்து 500 வாகங்கள் புறப்பட திட்டமிட்டுள்ளோம். இவ் வாகனங்களில் இருந்து பல்லாயிரவர் புறப்பட்டு திருச்சி மாநாட்டில் பங்கேற்றிட திட்டம் வகுத்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

அதேற்கேற்றார் போல் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கிளைக்கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளைக்கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் என்று கழக நிர்வாகிகள் உள்பட கழக முன்னணித் தோழர்கள், உறுப்பினர்கள் என்று பல்லாயிரவர் பங்கேற்று திருச்சி மாநாடு திருப்பு முனை மாநாடு என்பதினை மீண்டும் ஒரு முறை மெய்பித்திடும் வகையில் இம் மாநாட்டில் பங்கேற்றிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், எழும்பூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா–33, நேர்மையின் தூண்கள் ஊடகம்! நீதியை வளர்ப்பது திராவிடம்!! எனும் தலைப்பில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், கழக அயலக அணி துணைச்செயலாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி, தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் இந்து என்.ராம், நக்கீரன் கோபால், அருணன், அய்யநாதன், பிரியன், திருமதி.லட்சுமி சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.